ர் அவர்.

ஒத்திவைத்தது.

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
கந்தகோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் என வழங்கும்

# ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்

44, இராசப்பசெட்டிதெரு, பூங்காநகர், சென்னை-3

## வேலை வாய்ப்பு விளம்பர அறிவிப்பு நாள் 02.07.2024

சென்னை-3, பூங்கா நகர், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தில் கீழ்கண்ட விவரப்படியான காலிப் பணியிடங்களுக்கு தக்கார் தீர்மானத்தின்படி பணியாளர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ள இந்து மதத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து **02.08.2024** தேதி மாலை **5.45** மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | பதவி | பணியிடங்கள் எண்ணிக்கை | சம்பள விகிதம் ரூ. | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | ஓதுவார் | 1 | Pay Matrix Level 12(1) 11600/- அடிப்படை ஊதியம் | 1. தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்<br>2. சமய, அரசு, பிற நிறுவனத்தால் நடத்தப்படும் தேவார பாடசாலை அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்களின் சம்பந்தப்பட்ட துறையில் பயிற்சி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். தேவாரம் இசையுடன் பாடும் திறமை இருக்க வேண்டும். |
| 2. | பரிச்சாரகர் | 1 | Pay Matrix Level 14(1) 13200/- அடிப்படை ஊதியம் | 1. தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்<br>2.திருக்கோயில்களில் ஆகம விதிப்படி நைவேத்யம் மற்றும் பிரசாதம் தயார் செய்ய தெரிந்திருக்க வேண்டும் மற்றும் திருக்கோயில் பூஜை மற்றும் சடங்குகள் பற்றி தெரிந்திருக்க வேண்டும். |
| 3. | சுயம்பாகி | 1 | Pay Matrix Level 14(1) 13200/- அடிப்படை ஊதியம் | |

1.**2024** ஜுலை **1** அன்று **18** வயது பூர்த்தியானவராகவும், **45** வயது பூர்த்தியடையாதவராகவும் இருத்தல் வேண்டும். இதர விவரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் வந்து தெரிந்து கொள்ளவேண்டும்.

2.விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் அல்லது **https://hrce.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம் என்கிற பெயரில் உள்ள பக்கத்தில் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

3.படிவங்களை பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களை அரசு பதிவு பெற்ற அலுவலரின் சான்றொப்பத்துடன் இணைத்து விண்ணப்பங்களை செயல் அலுவலர், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம், எண்.44, இராசப்ப செட்டி தெரு, பூங்கா நகர், சென்னை-3 என்ற முகவரியில் சேர்ப்பிக்க வேண்டும். **02.08.2024** மாலை **5.45** மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும், தேவையான விபரங்கள் மற்றும் இணைப்புகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்களும், வேறு வகையில் உருவாக்கப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இடம் : சென்னை
நாள்: 01.07.2024 செ.ம.தொ.இ / 649 / வரைகலை / 2024

**திருக்கோயில் நிர்வாகம்**

ாதீன அறிவிப்பு

. மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஒசூர் முதன்மைச் சாலை, பெங்களூரு-560068.

உ

தமிழ்நாடு அரசு –இந்து சமய அறநிலையத்துறை

கந்தகோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் என வழங்கும்

# ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்

44, இராசப்ப செட்டி தெரு, பூங்கா நகர், சென்னை–600 003.

விண்ணப்ப எண்.

புகைப்படம்

**பரிச்சாரகர் பணியிடத்திற்கான விண்ணப்பப் படிவம்**

| | | |
|---|---|---|
| 1 | **பெயர் (பெரிய எழுத்துக்களில்)** | |
| 2 | தந்தை பெயர் | |
| 3 | தற்போதைய முகவரி<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| 4 | நிலையான முகவரி | |
| 5 | தொடர்புக்கான தொலைபேசி எண். / அலைபேசி எண். | |
| 6 | ஆதார் எண்<br>(நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 7 | மதம் மற்றும் வகுப்பு (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 8 | பிறந்ததேதி மற்றும் வயது (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 9 | கல்வித் தகுதி (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 10 | முன் அனுபவம் | |
| 11 | நன்னடத்தைச் சான்று அளித்தவர் பெயர், பதவி விவரம் (நன்னடத்தைச் சான்று அலுவலக முத்திரையுடன் இணைக்கப்பட வேண்டும்) | |
| 12 | பணி தொடர்பான குறிப்பான தகவல் ஏதேனும் | |
| 13. | குற்றவியல் நடவடிக்கைகள் ஏதுமில்லை என காவல்துறையினரால் வழங்கப்பட்ட நன்னடத்தைச் சான்று இணைக்கப்பட வேண்டும். | |

மேற்குறித்த விவரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும், விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தகுதிகளை பெற்றுள்ளேன் எனவும் உறுதி அளிக்கிறேன்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

# <u>பரிச்சாரகர் பணியிடத்திற்கான தகுதிகள்</u>

1. விண்ணப்பதாரர் **01.07.2024** அன்று **18** வயதைப் பூர்த்தியடைந்துள்ளவராகவும், **45** வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். நைவேத்திய பிரசாதம் செய்வதற்கும், அர்ச்சகருக்கு உதவி செய்வதற்கும், திருக்கோயில் பூஜை மற்றும் சடங்குகள் பற்றி தெரிந்திருக்க வேண்டும். அனுபவம் பெற்றதற்கான சான்று பெற்றிருக்க வேண்டும்.
3. இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும், உடல் ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்
4. திருக்கோயில்களில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. திருக்கோயிலுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் / வழக்குத் தொடுத்தவர்கள் /நிலுவைத் தொகை வைத்திருப்பவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
6. விண்ணப்பதாரர் காவல்துறையில் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவராகவோ, குற்றவாளி என அறிவிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.
7. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
8. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறையின் சட்டவிதிகளின்படியும் நேர்முகத் தேர்வு நடைபெறும்.
9. தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நேர்முகத் தேர்விற்கான அழைப்பாணை தனியே பின்னர் அனுப்பப்படும்.
10. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்பவர்களுக்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
11. நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் நபர் / நபர்களை எவ்வித காரணமும் கூறாது நிராகரிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
12. தேர்வு செய்யப்படும் நபர்கள் போலியான சான்றிதழ்கள், ஆவணங்கள் சமர்ப்பித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யப்படுவர். மேலும் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர்.
13. ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
14. நிர்வாக காரணங்களுக்கான மேற்கண்ட வேலைவாய்ப்பு அறிவிப்பினை மாற்றம் செய்திட திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.
15. இணைக்கப்பட வேண்டிய சான்றிடப்பட்ட நகல்கள்
16. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பணி நியமன ஆணை வழங்கப்பட்டதும் பணியில் சேரும் முன் அரசு பதிவு பெற்ற மருத்துவரிடம் உடற்தகுதி சான்று பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை **02.08.2024** மாலை **5.45** மணிக்குள் **செயல் அலுவலர், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம், எண்.44, இராசப்ப செட்டி தெரு, பூங்காநகர், சென்னை–600 003** என்ற முகவரியில் கிடைத்திடும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

**சி. நித்யா**
தக்கார்/உதவி ஆணையர்

**க.சிவக்குமார்**
செயல் அலுவலர்